சொல்லிக்கொள்கிறேன். இந்தப் பிரச்னையைப் பற்றி அறையில் வந்து கேட்டால் எப்போது, என்றைக்கு எடுத்துக் கொள்ளப் படும் என்பதைப் பற்றி விளக்கமாக நான் சொல்ல முடியும்.

[முற்பகல் 10-10]

(இ) சட்டமன்றப் பேரவை அலுவலகத்திலுள்ள இட நெருக்கடி குறித்து.

* திரு. பொ. விஜயராகவன்: தலைவரவர்களே, இங்கே நம்முடைய சட்டமன்றத்தில் ஆர். ஆர். செக்ஷனாக இருந்தாலும் மற்ற செக்ஷன்களாக இருந்தாலும் அங்கே போக, வர மிகவும் கஷ்டமாக இருக்கிறது. ஏனென்றால் இடநெருக்கடி கடுமையாக இருக்கிறது. மேசைகளேயும், நாற்காலிகளேயும் நெருக்கமாகப் போட்டுக் கொண்டு, அலுவலர்களும் இடநெருக்கடியில்தான் இருந்து கொண்டிருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் 4, 5 பேர் போய்விட்டால் அங்கே நிற்கக்கூட முடியாத சூழ்நிலே இருந்துகொண்டிருக்கிறது. ஏற்கெனவே சட்டமன்றத்திற்கு இடம் ஒதுக்கீடு செய்ய உறுதிமொழி அளித்தார்கள். இப்போது இட நெருக்கடி மிகவும் அதிகமாக இருப்பதால், உடனடியாக அளிக்கப்பட்ட உறுதிமொழியை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் உணர்வுகளே நான் ஒத்துக்கொள்கிறேன், சட்ட மன்றத்திற்கு இருக்கின்ற பல பிரச்னைகள் தீர்க்கப்படாமலிருப் பதை நாங்கள் உணர்கிறோம். திரு. விஜயராகவன் அவர்களு டைய கோரிக்கை மிகவும் நியாயமானது, அந்த நியாயத்தை உணர்ந்து இருக்கிற நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களே இந்த குறைபாட்டைத் தீர்த்துவைக்கும்படி நான் கேட்டுக்கொள்கிறேன். துறைச் செயலாளர் மூலமாகக் கோரிக்கையை அனுப்பி வைக்கிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: திரு. விஜயராகவன் அவர்களின் கோரிக்கை நிச்சயம் பரிசீலிக்கப்படும் என்று சொல்லுகின்ற அதே நேரத்தில் அதை நிறைவேற்றுகின்ற உணர்வைத் தூண்டுகின்ற சபாநாயகர் அவர்கள் என்னே காட்டிக் கொடுக்க வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் காட்டிக்கொடுக்க வில்லே; இது கோரிக்கை.